1979 ஏப்ரல் 30]

## இணைப்பு II.

[..607ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 1027-க்கான விடையைக் காண்க]

### தொழில்துறை.

(அ) தமிழ்நாட்டில் தற்போது கீழ்க்கண்டயிடங்களில் உப்பளங்கள் இயங்கி வருகின்றன:—

| மாவட்டத்தின் பெயர். | உப்பளங்கள் உள்ள ஊர்களின் பெயர். |
|---|---|
| (1) திருநெல்வேலி | 1. தூத்துக்குடி, 2. ஆறுமுகநேரி. 3. வேப்பலோடை. |
| (2) கன்னியாகுமரி | 1. இராஜக்கமங்கலம், 2. தாமரை குளம், 3. தட்டாரிபூவோடை. |
| (3) இராமநாதபுரம் | 1. மாரியூர், 2. மோர்குளம். 3. வட்டாணம். |
| (4) தஞ்சாவூர் | 1. வேதாரண்யம், 2. அதிராமபட்டினம். 3. தம்பிக்கோட்டை. 4. நீடுவாசல். |
| (5) தென்னாற்காடு | 1. மரக்காணம். 2. மானம்பாடி. 3. கடலூர். |
| (6) செங்கல்பட்டு | 1. கோவளம். 2. செய்யூர். 3. சூனாம்பேடு. 4. எண்ணூர். |
| (7) புதுக்கோட்டை | 1. காட்டுமாவடி. |

(ஆ) அதிக அளவில் உப்பை சேகரிக்கவும், காஸ்டிக் சோடாத் தொழிலில் கச்சாப்பொருளாக பயன்படுத்தப்படும் உப்பில் உள்ள அழுக்குகளை நீக்கி சுத்தமான உப்பைத் தயாரித்து வழங்கவும், மழைக்காலங்களில் ஏற்படும் உப்பு விரயத்தைத் தவிர்க்க மேற்கொள்ளப்படும் செலவைக் குறைக்க 5,000 டன்கள் அல்லது அதற்கும் மேலான அளவில் உற்பத்தியாகும் உப்பை கோபுரங்களாகக் குவித்து வைக்கவும் இயந்திரங்களைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு நவீன முறைகளைப் பெரிய அளவில் அமைந்துள்ள உப்பளங்களில் மட்டுமே இலாபகரமாகப் புகுத்த இயலும். இந்த நவீன இயந்திரங்களை வாங்க மத்திய அரசும் உப்பு நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கிறது. தமிழ்நாட்டில் தற்போதுள்ள வெஸ்டார்ன் இந்தியா மேட்ச் கம்பெனி, வேதாரண்யம். மெட்டூர் கெமிக்கல் அண்ட் இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன், மேட்டூர் அணை, தூத்துக்குடி சால்ட் அண்ட் மெரீன் கெமிக்கல்ஸ் லிமிடெட், தூத்துக்குடி மற்றும் மாருதி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி, திருப்போரூர் போன்ற பெரிய தொழிற்சாலைகள் அனைத்திலும் மிகவும் சுத்தமான உப்பு விஞ்ஞான ரீதியில் தயாரிக்க மேற்குறிப்பிட்ட நவீன வசதிகள் புகுத்தப்பட்டுள்ளன.